**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண் 132** **நாள் 03.09.2018**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 05.09.2018 அன்று சுனாமி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த மாதிரி பயிற்சி (Tsunami Mock Drill) நடைபெறவுள்ளது</u>**

தமிழ்நாடு மற்றும் பிற கடலோர மாவட்டங்களின் சுனாமி முன்னெச்சரிக்கை பற்றிய விவரங்கள் குறித்து ஐதராபாத்திலுள்ள இந்திய பெருங்கடல் முன்னறிவிப்பு அமைப்பு (INCOIS) தெரிவிக்கின்றது. தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையமானது இந்திய பெருங்கடல் முன்னறிவிப்பு அமைப்புடன் (INCOIS) இணைந்து ஆந்திர பிரதேசம், மேற்கு வங்கம், தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களில் உள்ள கடலோர மாவட்டங்களில் சில கிராமங்களை தேர்ந்தெடுத்து சுனாமி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கொண்ட மாதிரி பயிற்சியினை (Tsunami Mock Drill) 05.09.2018 அன்று நடத்துகின்றது. இந்த மாதிரி பயிற்சிக்கு 'இந்திய பெருங்கடல் அலை 2018 பயிற்சி' என பெயரிடப்பட்டுள்ளது.

இப்பயிற்சியின் முன்னோட்டமாக 03.09.2018 அன்று சென்னை வருவாய் நிருவாக ஆணையர் / மாநில நிவாரண ஆணையர் அலுவலகத்தில் காவல்துறை, கடலோர பாதுகாப்பு காவல்படை, தேசிய பேரிடர் மீட்புப் படை, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பல்துறை உயர் அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில பேரிடர் மேலாண்மை ஆணையர் 05.09.2018 அன்று நடைபெறவுள்ள மாதிரி சுனாமி முன்னெச்சரிக்கை நடவடிக்கையினை எவ்வாறு மேற்கொள்வது என விளக்கினார்.

இதனை தொடர்ந்து இம்மாதிரி பயிற்சி ஒத்திகையானது (Tsunami Mock Drill) பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளில் நடைபெறுகிறது.

1. சென்னை - சீனிவாசபுரம் வார்டு 173, மண்டலம் - 13
2. சென்னை - பனையூர் குப்பம் , வார்டு 198, மண்டலம் - 15

எனவே 5.09.2018 (புதன்கிழமை) அன்று நடைபெறும் சுனாமி எச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த பயிற்சியானது ஒரு மாதிரி ஒத்திகை பயிற்சி மட்டுமே ஆகும். இது குறித்து பொதுமக்கள் எவ்வித அச்சம் / பீதி அடைய தேவையில்லை என தெரிவிக்கப்படுகிறது.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**

**பெருநகர சென்னை மாநகராட்சி**